# GERAK GEMPUR SPM 2019

**KESUSASTERAAN TAMIL** **9217**

**2 ½ jam** **Dua jam tiga puluh minit**

**============================================================**

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. Kertas soalan ini mengandungi dua bahagian: **Bahagian Satu** dan **Bahagian Dua**.
2. Setiap bahagian mempunyai tiga ceraian: *novel, drama dan sajak.*
3. Jawab **semua** soalan dalam **Bahagian Satu** dan **tiga** soalan dalam **Bahagian Dua**.

---

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பிரிவு ஒன்று : கவிதை

... உலகில் கல்வியை
எந்த மொழியும் ஈயும் எனினும்,
தன்னைத் தன்னினப் பின்னணி யெல்லாம்
உணர்த்தி உலகில் உயரச் செய்வது
தாய்மொழிக் கல்வியே; தக்கார் கூற்றிது
தன்னை அறியான் தகவெலாம் பெறினும்
குறையுடை யோனே கோதறச் செய்யத்
தாய்மொழிக் கல்வியே தன்னுயிர்க்கு
நிகரெனக் கொள்ளலே நிறையுடைத் தாமே!

**- முரசு நெடுமாறன்**

**1** இக்கவிதை அடிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது?
(2 புள்ளி)

**2** இக்கவிதை அடிகளில் காணப்படும் **சீர்மோனைகள்** இரண்டனை எழுதுக.
(4 புள்ளி)

**3**

**தன்னை அறியான் தகவெலாம் பெறினும்**
**குறையுடை யோனே கோதறச் செய்யத்**
**தாய் மொழிக் கல்வியே தன்னுயிர்க்கு**
**நிகரெனக் கொள்ளலே நிறையுடைத் தாமே!**

இவ்வடிகள் உணர்த்தும் **கருத்தை** விளக்குக.

(4 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

**4** கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **உலுக்கல்** ஒன்றனைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

**5** கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் கம்பர் **பிறந்த ஊரின் பெயரைக்** குறிப்பிடுக.

(2 புள்ளி)

**6** கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| |
|---|
| கலைமகள் எனக்குத் திருவருள் செய்கிறாள்; **உமக்கோ குற்றேவல் செய்கிறாள்!** ஆயர் மங்கையாக உருவெடுத்து வந்து உம் கட்சிக்கு அவள் வெற்றி தேடித் தருகிறாள். நான் இனி உம்முடன் வாதிடுவதிலோ சக்கரவர்த்தியிடம் ஆஸ்தான கவியாக வீற்றிருப்பதிலோ அர்த்தமே இல்லை.<br>(அங்கம் 1. காட்சி 11, பக்கம் 83<br>பாரி நிலையம் 2015 |

(i) இக்கூற்றில் இடம்பெற்றுள்ள **இருவர்** யாவர்? (2 புள்ளி)

(ii) இக்கூற்றைக் கூறுபவரின் இரண்டு **பண்புக்கூறுகளை** எழுதுக.

(2 புள்ளி)

(iii) இக்கூற்றைக் கூற நேர்ந்ததற்கான **காரணம்** யாது?

(4 புள்ளி)

(iv) **'உமக்கோ குற்றேவல் செய்கிறாள்!...'**

எனும் சொற்றொடருக்குச் சூழலுக்கேற்ற **பொருள்** எழுதுக.

(3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

**7** அகல்விளக்கு நாவலின் இரண்டு **துணைக்கருப்பொருளினைக்** குறிப்பிடுக.
(2 புள்ளி)

**8** அகல்விளக்கு நாவலின் இரண்டு **மொழிநடையினைக்** குறிப்பிடுக.
(2 புள்ளி)

**9** கீழ்க்காணும் கூற்றை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> திருந்துவான் என்று பார்த்தேன். திருந்துவதாகத் தெரியவில்லை. குடும்பத்திற்குப் பிள்ளை என்று இருக்கிறான். அவ்வளவே தவிர நல்ல பெயர் எடுப்பதாகத் தெரியவில்லை. பொருளிலும் கருத்து இல்லை. வரவு செலவு பார்த்து வாழக் கற்றுக்கொள்ளவில்லை. கேட்டால் **உதறிவிட்டு போய்விடுவானோ** என்று பயமாக இருக்கிறது.
>
> *(அத்தியாயம் 20, பக்கம் 275)*
> பாரி நிலையம்,2015

(i) மேற்காணும் கூற்றில் இடம் பெற்றுள்ள **இருவர்** யாவர்?
(2 புள்ளி)

(ii) இக்கூற்றைக் கூறுபவரின் இரண்டு **பண்புக்கூறுகளை** எழுதுக.
(2 புள்ளி)

(iii) இக்கூற்றைக் கூற நேர்ந்ததற்கான **காரணம்** யாது?
(4 புள்ளி)

(iv) **'உதறிவிட்டு போய்விடுவானோ'** எனும் சொற்றொடருக்குச் சூழலுக்கேற்ற **பொருள்** எழுதுக.
(3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

## பிரிவு ஒன்று – கவிதை

**10** கீழ்க்காணும் கவிதையின்வழி வாழ்வின் உயர்விற்காக கவிஞர் கூறும் கருத்துகளை விளக்கி எழுதுக.

### வெறுங்கை என்பது மூடத்தனம்

வெறுங்கை என்பது மூடத்தனம் – உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!
கறுங்கல் பாறையும் நொறுங்கிவிடும் – உன்
கைகளில் பூமி சுழன்றுவரும்!

மூலையில் கிடக்கும் வாலிபனே – தினம்
முதுகினில் வேலையைத் தேடுகிறாய்!
பாலை வனம்தான் வாழ்க்கையென – வெறும்
பல்லவி எதற்குப் பாடுகிறாய்!

விழிவிழி உன்விழி நெருப்புவிழி – உன்
விழிமுன் கதிரவன் சின்னப்பொறி!
எழுஎழு தோழா! உன்னெழுச்சி – இனி
இயற்கை மடியில் பெரும்புரட்சி!

நீட்டிப் படுபுவி உருண்டையிலே – பார்
நீயே புவிமத் தியரேகை!
போட்டுநீ கொடுக்கும் நிகழ்ச்சிநிரல் – அது
புவியை வலம்வரும் புதுப்பாதை!

கட்டை விரலையும் விடஇமயம் – இன்னும்
குட்டை என்பதை எடுத்துச்சொல்!
சுட்டும் உன்விரல் நகமாக – வான்
சுருங்கிய தென்றே முழங்கிச் சொல்!

தோள்கள் தாம்உன் தொழிற்சாலை – நீ
தொடுமிடம் எல்லாம் மலர்ச்சோலை!
தோல்விகள் ஏதும் உனக்கில்லை – இனித்
தொடுவான் தானே உன்எல்லை!

**- கவிஞாயிறு தாராபாரதி.**

[20 புள்ளி]

**அல்லது**

**11** கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**விண்மீன்**

சின்னச் சின்ன அகல்விளக்கு – கண்
சிமிட்டி அழைக்கும் பொன்விளக்கு
எண்ணில் அடங்காப் பலகோடி!- அவை
எண்ணெய் இல்லா மின்விளக்கு!

திரியும் கலமும் இல்லாமல் – சுடர்
எரியும் விந்தைத் திருவிளக்கு!
முறையாய் அவற்றில் ஒளியேற்றும் – பணி
புரியும் கதிரும் பெருவிளக்கு!

வானக் குளத்தின் மீன்களெனை – பெயர்
வைத்தார் முன்னோர் அழகாக!
வானத் திரையின் பொத்தலெனச் –சிலர்
வரைந்தார் அறியாத் தனமாக!

அள்ளி முடித்த கூந்தலினை – மதி
அழகி அவிழ்த்தாள்! விரிந்திடவே!
புல்லிக் கிடந்த அரும்புமலர் – உடன்
பொலபொல வென்றே இறைந்தனனே!

கோலம் போடப் புள்ளிவைத்தாள் – ஒரு
கோதை வான முற்றத்தில்!
ஆளன் அன்பாய் அழைத்திடவே – அவள்
அக்கணம் விட்டாள் திட்டத்தினை!

விண்ணை ஆளும் பேரரசன் – ஒளிர்
பொன்னைக் குவித்துப் புரந்தனனே!
என்ன நினைத்தோ ஒருநாளில் – அவன்
எட்டி உதைத்தான் இறைந்திடவே!

நிலவுப் பெண்ணின் பிறந்தவிழா! – உயர்
நீள்வா னெங்கும் கொண்டாட்டம்!
குழைகள் அணிந்த பெண்களெல்லாம் – அவண்
கும்மி அடிக்கும் மின்னோட்டம்!

**[கருதிருவரசு – விண்மீன்]**

(i) இக்கவிதையில் காணப்படும் **அணிச்சிறப்புகள்** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

(ii) இக்கவிதையில் கவிஞர் விண்மீனைப் பாடும் **பாங்கினை** விளக்குக.
(10 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

**12** கவிச்சக்ரவர்த்தி நாடகத்தின் **கதைச்சுருக்கத்தை** எழுதுக

[20 புள்ளி]

**அல்லது**

**13** (i) கவிச்சக்ரவர்த்தி நாடகத்தின் **மொழிநடை** இரண்டனை விளக்கி எழுதுக.

(6 புள்ளி)

(ii) கவிச்சக்ரவர்த்தி நாடக **துணைக்கருப்பொருள்** நான்கினை விளக்கி எழுதுக.

(14 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

**14** வேலய்யன் மற்றும் சந்திரன் கதாபாத்திரங்களை **ஒப்பீடு** செய்க.

[20 புள்ளி]

**அல்லது**

**15** (i) அகல்விளக்கு நாவலின் **உத்திமுறை** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

(ii) இமாவதியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 புள்ளி)

[20 புள்ளி]

**தேர்வுத்தாள் முடிவுற்றது**

## SKEMA GERAK GEMPUR SPM
## KESUSASTERAAN TAMIL 2019

| | | |
|---|---|---|
| 1 | கல்வி | 2 |
| 2 | **சீர்மோனை**: எந்த-ஈயும்; தன்னைத்-தன்னினப்; உணர்த்தி-உலகில்; உலகில்-உயரச்; தன்னை-தகவெலாம்; குறையுடை-கோதறச்; தாய்மொழி-தன்னுயிர்; கல்வியே-தன்னுயிர்; நிகரென-நிறையுடை | 2X2 |
| 3 | தாய்மொழிக் கல்வி பெறாததால் தன்னை அறியாதவன் சிறப்புகள் யாவும் பெற்றிருந்தாலும் குறைபாடுகள் உடையவன்தான்.<br>இந்தக் குறைநீக்க, தாய்மொழிக் கல்வியைத் தன் உயிர்க்கு நிகராகக் கொள்ளுதலே ஒருவர்க்கு நிறைவினைத் தரும். | 2<br>2 |

| | | |
|---|---|---|
| 4 | ஒட்டக்கூத்தர் அவர் எழுதிய இராமாயணத்தைக் கிழித்து வீசுதல் | 2 |
| 5 | திருவழுந்தூர் | 2 |
| 6 | i) ஒட்டக்கூத்தர், கம்பர் | 2 |
| | ii) தோல்வியை ஏற்க முடியாதவர்<br>தாழ்வு மனப்பான்மை உடையவர்<br>எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்<br>கம்பரின் புலமையைப் போற்றுபவர். | 2 |
| | iii) ஒட்டக்கூத்தர் மனமுடைந்து தான் எழுதிய இராமயணத்தைக் கிழித்ததால்<br>கம்பரின் தமிழ் புலமைக்குக் கலைமகள் உறுதுணையாக இருப்பதை ஒட்டக்கூத்தர் நம்பியதால் | 2<br>2 |
| | iv) கம்பரின் தமிழ்ப் புலமைக்கு கலைமகள் பக்கத்துணையாக இருக்கிறாள். | 3 |

| | | |
|---|---|---|
| 7 | • கல்வி வாழ்வை உயர்த்தும் (வேலய்யன்)<br>• நல்ல நட்பு போற்றத்தக்கது (வேலய்யன் , சந்திரன்)<br>• மூடநம்பிக்கை வாழ்வை சீரழிக்கும் (மாலன்)<br>• உயரிய பெண்மை மதிக்கத்தக்கது (பாக்கியம் அம்மையார், சந்திரனின் அத்தை)<br>• கொள்கையை வகுத்து வாழ்வதே சிறப்பு ( வேலய்யன்)<br>• ஆண் பெண் உறவில் கட்டுப்பாடு தேவை (சந்திரன், இமாவதி)<br>• அறநூல்கள் வாழ்வை நெறிப்படுத்தும் (பாக்கியம் அம்மையர்)<br>• ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை (மணிமேகலை)<br><br>* ஏற்புடைய பதில்கள் | 2 |
| 8 | மொழியணி; வருணனை; பேச்சு மொழி; இலக்கிய நடை | 2 |

| | | | |
|---|---|---|---|
| 9 | i | சாமன்னா, வேலய்யன் | 2 |
| | ii | • மன ஆதங்கத்தை வெளிப்படையாகத் தெரிவிப்பவர்<br>• மகன் நலத்தில் அக்கறை கொண்டவர் | 2 |
| | iii | • கற்பகத்தின் திருமணத்திற்கு வந்த வேலய்யனை சந்தித்ததால்<br>• சந்திரனைப் பற்றிய மன ஆதங்கத்தை வேலய்யனிடம் கொட்டித் தீர்க்க நினைத்ததால் | 4 |
| | iv | • சந்திரனுக்குக் குடும்பத்தின் மீது பற்றும் பாசமும் குறைவாக உள்ளதால் தனக்குப் பிடிக்காத விசயத்தைக் காரணங் காட்டி குடும்பத்தைவித்துப் பிரிந்து முன்போல் தன்வழியே செல்லக்கூடும் | 3 |

| எண் | கருத்துகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 10 | வாழ்வின் உயர்விற்காக கவிஞர் கூறும் கருத்துகள்<br><br>முன்னுரை:<br>- கவிஞர் தாராபாரதி - வெறுங்கை என்பது மூடத்தனம்<br>- பாடுபொருள் - ஊக்கம்<br>- மையக்கரு - ஊக்கமிருப்பின் வெற்றி கிட்டுவது உறுதி<br><br>கருத்துகள்:<br>1. பொருளில்லை என்று செயல்படாமல் இருப்பது அறிவுடைமையாகாது.<br>2. நம் வாழ்க்கை நமது கையில்.<br>3. முயன்றால் சவால்களையும் இடர்களையும் கடக்க முடியும்.<br>4. உழைப்பால் உலகை நம் வசப்படுத்த முடியும்.<br><br>5. இளைஞர்கள் முனைப்பின்றி சோம்பேறியாய் இருக்கக்கூடாது.<br>6. கடந்த கால தோல்விகளை எண்ணி புலம்பலாகாது.<br>7. விழிப்புணர்வு பெற்றுத் தீவிரமாக செயலாற்ற வேண்டும்<br>8. பெரிய சவால்களையும் சமாளிக்க இயலும்.<br>9. வீறுகொண்டெழுந்தால் நம்மால் உலகில் பல மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.<br>10. ஊக்கமிகுந்த செயல்பாடுகளால் உலகை ஆள வேண்டும்.<br>11. நமது திட்டங்களால் உலகை இயக்கி முன்னேற்றங்களைக் கொண்டு வர வேண்டும்.<br>12. ஊக்கத்தோடு செயல்பட்டால் மிகப் பெரிய சவால்களையும் சமாளிக்க முடியும்.<br>13. மனமிருந்தால் மிகப் பெரிய சாதனைகளையும் நம்மால் சாதிக்க முடியும். | <br><br><br>2<br><br><br><br><br><br><br><br>15 |

| | | |
|---|---|---|
| | 14. உடல் பலமும் உழைப்பும்தான் வெற்றிக்கு அடிப்படை<br>15. வெற்றிப் பெறுவதோடு தொடர் வெற்றிகளும் சேரும்.<br><br>முடிவுரை: ஏற்புடையது. | <br><br><br>2 |
| 11<br>I. | அணிச் சிறப்புகள் மூன்றனை விளக்கி எழுதுக.<br><br>1. உருவக அணி<br>விண் மீனுக்கான உருவகம்<br>* அகல்விளக்கு<br>* பொன்விளக்கு<br>* மின்விளக்கு<br>* திருவிளக்கு<br>* வானக் குளத்தின் மீன்<br>* வானத்திரையின் பொத்தல்<br>* அரும்பு மலர்<br>* கோலப் புள்ளி<br>* மின்னும் குழைகள்<br>* கதிரவன் - பெருவிளக்கு<br>* நிலவ - மதியழகி, பெண்<br><br>2. திரிபு அணி<br>பொன்விளக்கு – மின்விளக்கு; திருவிளக்கு – பெருவிளக்கு; திரியும் - எரியும்<br><br>3. பின்வருநிலை<br>சின்னச் சின்ன<br><br>4. தற்குறிப்பேற்ற அணி<br>கண் சிமிட்டி அழைக்கும் பொன்விளக்கு<br><br>5. சுவை அணி<br>எந்த அடியும் பொருந்தும்.<br><br>புள்ளிகள் வழங்கும் முறை:<br>1. அணியைக் குறிப்பிடுதல்<br>2. எடுத்துக்காட்டு வழங்குதல்<br>3. விளக்குதல் | <br><br><br><br><br><br>1<br>1<br>1<br>[3x3 = 9 + 1] |

| | | |
|---|---|---|
| Ii. | கவிஞர் விண்மீனைப் பாடும் பாங்கு:<br><br>1. அகல்விளக்கு, பொன்விளக்கு, மின்விளக்கு<br>2. இயற்கையாய் எரியும் தெய்வ விளக்கு<br>3. வானத்தில் நீந்தும் மீன்கள்<br>4. வானத் திரையில் விழுந்த துளைகள்<br>5. சிதறி விழுந்த மலர்கள் - விளக்கம்<br>6. கோலத்தின் புள்ளிகள் - விளக்கம்<br>7. வானில் சிதறிய பொன்மணிகள் - விளக்கம்<br>8. பெண்களின் தோடு - விளக்கம் | <br><br>1<br>1<br>1<br>1<br>1.5<br>1.5<br>1.5<br>1.5<br><br>[10] |

| எண் | கருத்துகள் | புள்ளி |
|---|---|---|
| 12 | <u>முன்னுரை :</u><br>-படைப்பு - கு.அழகிரிசாமி<br>-மையக்கரு - கம்பரின் தனித்துவமும் கவிப்புலமையும்<br>-கம்பர் பின்னணி.<br><br><u>கருத்துகள் :</u><br>-உழவர்களைப் போற்றும் கம்பரைச் சடையப்ப வள்ளல் ஆதரிக்கிறார்.<br>-'ஏர் எழுபது' பிரபந்தத்தை அரங்கேற்றுகிறார்.<br>-குணவீரப் பண்டிதரின் மூலம் கம்பரின் பெருமையை அறிந்த குலோத்துங்க மன்னன் கம்பரை அரசவைக்கு அழைத்து வரச் செய்கிறார்.<br>-மன்னன், அரசவை தலைமை புலவர் ஒட்டக்கூத்தரிடமும் கம்பரிடமும் இராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் படி கேட்டுக்கொள்கிறார்.<br>-ஒருநாள் கமபர் இயற்றிய பகுதியின் ஒரு பகுதியைக் கூறும்படி பணிக்கப்படுகிறார்.<br>-அதில் இடம்பெற்ற 'துமி' எனும சொல் தமிழில் இல்லை என கூத்தர் வாதம் செய்கிறார்.<br>-அச்சொல் மக்கள் வழக்கில் உள்ளது எனும் கம்பரின் கூற்றைக் கண்டறிய மூவரும் மாறு வேடத்தில் நகர்வலம் போகின்றனர்.<br>-தயிர் கடையும் பெண் ஒருத்தி அச்சொல்லைப் பயன்படுத்தியதைக் கேட்ட கூத்தர் தோல்வியால் மனமுடைந்து போகிறார்.<br>-இல்லம் திரும்பிய கூத்தர் தான் இயற்றிய இராமாயணத்தைக் கிழித்தெறிகிறார்.<br>-அப்போது கதவை உடைத்து உள்ளே நுழையும் கம்பர் உத்தர காண்டத்தை மட்டும் காப்பாற்றி தமது இராமாயணத்தில் இணைக்கப் போவதாகக் கூறுகிறார்.<br>-இதன் பின் கம்பர் தமது இராமாயணத்தைச் சடையப்ப வள்ளல் வீட்டில் இயற்றி முடிக்கிறார். | <br><br>2 பு<br><br><br><br>15 பு |

| | | |
|---|---|---|
| | -பின்னர் மன்னனின் கட்டளையையும் மீறி இராமாயணத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றுகிறார்.<br>-கம்பரின் மகன் அம்பிகாவதியும், மன்னன் மகன் அமராவதியும் காதலில் கலந்து காந்தர்வ மணம் புரிகின்றனர்.<br>-கோபமுற்ற குலோத்துங்க மன்னன் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கிறார்.<br>-கம்பர் எவ்வளவோ மன்றாடியும் மன்னன் தண்டனையை நிறைவேற்றுகிறார்.<br>-காகதீய மன்னன் கம்பருக்கு வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்தும், பண்டிய மன்னனும் அரசியும் கம்பரின் பல்லாக்குச் சுமந்தும் தங்களது அன்பை வெளிப்படுத்துகின்றனர்.<br>-மகனின் மறைவால் பாதிக்கப்பட்ட கம்பர் தனிமையை நாடி செல்கிறார்.<br>-இடையில் சிங்கன் என்ற ஏழைக் கொல்லன் வீட்டில் தங்கிச் செல்கிறார்.<br>-தமது இராமாயணத்தில் வரும் சூர்ப்பனகை பாத்திரத்தை நாடகமாக நடிக்கும், நாட்டிய பெண்மணியின் மகள் சிலம்பியை வாழ்த்தி விடைபெறுகிறார்.<br>-இறுதி காலத்தை நாட்டரசன் கோட்டையில் கழிக்கிறார்<br>-சோழ மன்னன் போரில் தோல்வியுற்ற செய்தியும், சடையப்ப வள்ளலின் மறைவும் அவரை வாட்ட, கலங்கியபடி இறுதி மூச்சை விடுகிறார்.<br><br><u>முடிவுரை: நாடகத்தின் சிறப்பு, படிப்பினை</u> | 2பு |
| 13<br>(i)<br><br><br><br><br><br>(ii) | -இலக்கிய நடை<br>-வருணனை<br>-காதல்மொழி<br>-வசை மொழி<br>-சந்த நடை<br><br><u>முன்னுரை :</u><br>-படைப்பு - கு.அழகிரிசாமி<br>-மையக்கரு - கம்பரின் தனித்துவமும் கவிப்புலமையும்<br>-பல துணைக்கருத்துகளைக் கொண்டுள்ளது.<br><br><u>கருத்துகள் :</u><br>-உழவுத் தொழிலைப் போற்ற வேண்டும்.<br>-புலமையை / சான்றோர்களைப் போற்றவேண்டும்.<br>-கல்வியால் குலம் சிறக்கும்.<br>-நன்றி உணர்வு அவசியம்.<br>-போரினால் பல விளைவுகள் ஏற்படும்.<br><br>முடிவுரை:<br>-பல்வேறு சிந்தனைகள் வெளிபடுகின்றன. நாடகத்திற்குச் சுவைக் கூட்டுகிறது | 2 X 3<br>6பு<br><br><br><br><br><br><br>1பு<br><br><br><br>4 X 3<br>12பு<br><br><br><br><br>1பு |

| எண் | கருத்துகள் | புள்ளி |
|---|---|---|
| 14 | **முன்னுரை**<br>• அகல்விளக்கு நாவல்<br>• நாவலாசிரியர் டாக்டர் மு.வரதராசனார்<br>• கருப்பொருள்-நல்லொழுக்கமும் மனக்கட்டுப்பாடும் நல்வாழ்வுக்கு அடித்தளம்<br>• தலைப்பைத் தொட்டு வாக்கியம் | 2 பு |
| | **பிறருக்கு உதவும் குணம்**<br>- வேலய்யன் முதுகுக் கட்டியல் அவதிப்பட்ட தந்தையின் நிலையறிந்து மளிகைக்கடையைக் கவனித்தல்<br>- வேலய்யன்நண்பன் மாலனுக்குப் சுயதொழில் செய்ய பண உதவி செய்தல்<br>- சந்திரன் கணிதப்பாடத்தில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற வேலய்யனுக்கு உதவி செய்தல்.<br><br>**நட்பைப் போற்றி மதித்தல்**<br>_ வேலய்யன் உயர்நிலைப்பள்ளியில் தொடங்கிய நட்பை இறுதிவரை தொடர்கின்றான்.<br>- தொழுநோயாளியாகத் தன்னிடம் வந்த நண்பன் சந்திரனை தன் வீட்டில் அடைக்கலம் தந்து அன்போடு கவனிக்கின்றான்.<br>- சந்திரனோ வேலய்யனுடன் நட்பைப் போற்றாமல் கல்லூரியில் அவனுடனான நட்பைக் குறைத்துக் கொள்கின்றான்.<br>- வேலய்யனே வந்து பேசினாலும் அவனை அலட்சியம் செய்தான் சந்திரன்.<br><br>**அழகும் அறிவும்**<br>- அழகிலும் அறிவிலும் ஆரம்பத்தில் சிறந்து மிளிர்ந்தான் சந்திரன்<br>- அழகு குறைந்தாலும் இறுதியில் அறிவினால் வாழ்க்கையின் வெற்றி பெற்றான் வேலய்யன்.<br><br>**ஒழுக்கமும் மனக்கட்டுப்பாடும்**<br><br>- உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, இல்லற வாழ்க்கை எல்லா நிலையிலும் வேலய்யன் வாழ்க்கையில் ஒழுக்கமும் மனக்கட்டுப்பாடும் அடித்தளமாக இருந்தது.<br>- சந்திரனின் வாழ்க்கையிலோ, ஊர் பெண்கள் பலரின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றான். ஊர் மக்களே அவனைத் தூற்றும்படி நடந்து கொள்கின்றான். தனது ஒழுக்கக்கேடான செயலின் விளைவாகத் தொழுநோய்க்கு ஆளாகி துன்பத்தை அனுபவிக்கின்றான். | கருத்து 5X3 = 15புள்ளி |

| | | |
|---|---|---|
| | **குடும்பப்பற்று**<br>- வேலய்யன்தன் குடும்பப் உறுப்பினர்களின் மீது ஆழ்ந்த அன்பும் அக்கறையும் கொண்டவனாக விளங்குகின்றான்.தன் தங்கை மணிமேகலைக்குத் தையல்பொறி வாங்கித் தந்து குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள உதவுகின்றான்.<br>- வேலய்யன் முதுகுக் கட்டியல் அவதிப்பட்ட தந்தையின் நிலையறிந்து மளிகைக்கடையைக் கவனித்துக் கொள்கின்றான்.<br>- சந்திரனோ குடும்பச்சொத்தைப் பராமரிப்பதில் அக்கறை இல்லாமல் இருக்கின்றான்.<br>- ஒழுக்கக்கேடான நடத்தையால் குடும்பக் கௌரவத்திற்கு ஊறு விளைவிக்கின்றான்.<br>- நீலகிரி மலையில் அவன் தலைமறைவாகி வாழ்ந்தபோது பிரிவால் அவன் தாயார் உயிர் இழந்தார்.<br>-<br>**பெண்மையைப்போற்றுதல்**<br>- வேலய்யன் தன்னைச் சிறுவயது முதல் அன்புடன் வளர்த்த பாக்கிய அம்மையார் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளான்.<br>- பாக்கிய அம்மையாரைப் பற்றி சந்திரன் தவறாகக் கூறியதைக்கேட்டு உள்ளம் நொந்துகொள்கின்றான்.<br>- சந்திரனோ, ஊர் பெண்கள் பலரின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றான். பெருங்காஞ்சியில் தோட்டக்காரனுடைய பெண்ணோடு உறவுகொண்டு அவள் கணவனோடு வாழாதபடி செய்து விடுகின்றான்.<br>**முடிவு- ஒட்டுமொத்த கருத்து** | |

| | | |
|---|---|---|
| 15<br>I | • **பின்னோக்கு உத்தி**<br>கடந்த கால நிகழ்வுகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பின்னோக்கிப் பார்ப்பது.<br>- வாலாசப்பேட்டைக்குத்தன் உயர்கல்வியைத் தொடர வந்த சந்திரனுக்கும் தனக்கும் ஏற்பட்ட நட்பின் தொடக்கத்தை வேலய்யன் பின்நோக்கிப் பார்க்கின்றான்.<br>" *பாலாற்றங்கரையில் நானும் சந்திரனும் கைகோத்து உலாவிய நாட்கள் எங்கள் வாழ்க்கையின் பொன்னான நாட்கள்* "<br>• **கதைகூறல்**<br>- கதைப்பாத்திரங்களே கதையைக் கூறி, கதையை நகர்த்துவது<br>- தன் அண்டை வீட்டுக்காரரான பாக்கிய அம்மையாரைப் பற்றி வேலய்யனே வாசகருக்குக் கதை கூறுவது.<br>- " *தாய் இல்லாத குடும்பம் அது. பாக்கியம் அபருவம் அடைவதற்கு முன்னமே அவர் தாய் காலமாகிவிட்டார்.*"<br>• **கடித உத்தி**<br>- கதைப்பாத்திரம் தன் எண்ணங்களைத் தெரிவிக்கும் விதம். கடிதத்தை அனுப்புகின்றாள்.<br>- *அன்புள்ள அண்ணா,*<br>*இத்துடன் என் திருமண அழைப்பிதழை அனுப்பியுள்ளேன். நேரில் வந்து கொடுக்க எண்ணியுள்ளேன்.* | 3x3 =9<br>மொழி<br>1<br><br>[10] |
| II | • **ஆண் பெண் உறவில் தெளிவாக இருப்பவள்**<br>- சந்திரனுடன் பழகுவதைத் தன் அம்மா இடித்துரைக்குப்போது , ஆண் பெண் பழகுவது காதலாக மட்டும் இருக்க வாய்ப்பில்லை அது நல்ல நட்பாகக் கூட இருக்கலாம் எனத் தெளிவாக வாதிட்டாள்.<br>• **சந்திரனின் நலனில் அக்கறையுடையவள்**<br>- சந்திரனிடம் தான் அவனை அண்ணாக மட்டுமே எண்ணிப் பழகுவதை மனந்திறந்து மடலில் எழுதியும், திருமண அழைப்பிதழையும் இணைத்துள்ளாள்.<br>- சந்திரனின் நிலையை எண்ணி மனம் வருந்துகிறாள்.<br>• **தன் முடிவில் உறுதியாக இருப்பவள்**<br>- சந்திரன் ஒருதலையாக இமாவதியைக் காதலித்தாலும் அவள் தன்னைலையில் மிகவும் தெளிவாகவே இருந்தாள். சந்திரனை அண்ணானாக நினைத்து பழகியதில் இருந்து இறுதிவரை பின் வாங்கவே இல்லை. தனக்கென திருமணம் நடக்கும் அவள் சரியாகவே நடந்து கொண்டாள். | 3x3 =9<br>மொழி<br>1<br><br>[10] |